# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## புவியியல் –I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி 1

1. உலகில் அதிக சனத்தொகையைக் கொண்ட கண்டம் எது?
   (1) அவுஸ்திரேலியா (2) ஆசியா (3) ஐரோப்பா (4) வடஅமெரிக்கா
2. "உலகின் முகடு"எனும் சிறப்புப் பெயரினால் அழைக்கப்படுகின்ற மேட்டுநிலம் எது?
   (1) பமீர் மேட்டுநிலம் (2) தக்கணமேட்டுநிலம்
   (3) திபெத் மேட்டுநிலம் (4) ஈரான் மேட்டுநிலம்
3. ஆசியாவின் மிகநீளமான நதி எது?
   (1) பிரமபுத்திராநதி (2) யாங்சிநதி (3) கங்கைநதி (4) குவாங்கோநதி
4. தெளிவான கோடைகாலத்தையும், குளிர் காலத்தையும் காணக்கூடிய காலநிலை வலயம் எது?
   (1) அயன வலயம் (2) குளிர் வலயம் (3) வெப்பவலயம் (4) இடைவெப்பவலயம்
5. தலா மொத்தத் தேசிய உற்பத்தியின் அடிப்படையில் உலகில் மூன்றாவது பாரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு எது?
   (1) ஐக்கியஅமெரிக்கா (2) யப்பான் (3) பிரித்தானியா (4) இந்தியா
6. பின்வருவனவற்றுள் ஆசியாவில் கொகசோயிட் இனத்தவர் வாழ்கின்ற நாடுகள் இரண்டும் எவை ?
   (1) ஆப்கானிஸ்தான்,பாகிஸ்தான் (2) கொரியா,மலேசியா
   (3) இலங்கை,சிங்கப்பூர் (4) சீனா,யப்பான்
7. ஆசியாக்கண்டத்தில் குறைந்தளவான சனத்தொகையைக் கொண்டுள்ள நாடுகள் இரண்டும் எவை?
   (1) சீனா, இந்தியா (2) மெகாவோ,புருணை
   (3) பங்களாதேஷ் ,கட்டார் (4) வியட்நாம் , பஹ்ரைன்
8. யூபிரட்டீஸ், தைகிரிஸ் நதிகள் அமைந்துள்ள நாடு எது?
   (1) எகிப்து (2) ஈராக் (3) லிபியா (4) சீனா
9. ஆசியாவின் சனத்தொகை அடர்த்தி குறைந்த வலயம் எது?
   (1) கிழக்குஅசியா (2) தென்னாசியா (3) தென்கிழக்குஅசியா (4) மத்தியஆசியா
10. மகோகனி,ஏபோனி,ரோஸ்வூட்,ஏகேஷியா போன்ற உயரம் கூடிய தாவர வகைகள் காணப்படுகின்ற காடுகள் எவை?
    (1) ஊசியிலைக் காடுகள் (2) இலையுதிர் காடுகள்
    (3) அயனமழைக் காடுகள் (4) தைக்காக் காடுகள்



kalvi.lk

11. சர்வதேசமற்றும் மத்திய கிழக்குப் பிரதேசத்தின் வியாபார வர்த்தக மையமாக முக்கியத்துவம் பெறுகின்ற பூகோள நகரம் எது?

(1) பக்தாத் (2) தெஹ்ரான் (3) டுபாய் (4) பெய்ரூட்

12. மூலப்பொருட்கள், கனியவளங்களின் இறக்குமதிகளின் அடிப்படையில் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற ஆசிய நாடு எது?

(1) சீனா (2) இந்தியா (3) ஜேர்மனி (4) யப்பான்

13. கடல் பகுதியை நோக்கி நீண்டிருக்கும் வன்மையான பாறைகளைக் கொண்ட நிலப்பகுதி எப் பெயரால் அழைக்கப்படும்?

(1) குடா (2) முனை (3) ஓங்கல் (4) கடனீரேரி

14. விக்டோரியா,கொத்மலை நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ள நதி எது?

(1) கல் ஓயா (2) மகாவலிகங்கை (3) வளவகங்கை (4) களுகங்கை

15.

| "அ"நிரல் தரைத்தோற்ற அம்சம் | "ஆ"நிரல் உதாரணம் |
|---|---|
| 1. மலைத்தொடர் | A மஹவலத்தன்ன |
| 2. மேட்டுநிலம் | B கலகெதர |
| 3. கணவாய் | C கோவிந்தஹெல |
| 4. எச்சக்குன்று | D நக்கிள்ஸ் |

(1) BCDA (2) CABD (3) DABC (4) ACDB

16.

| "அ"நிரல் பிரதானஆறுகள் | "ஆ"நிரல் அமைக்கப்பட்டுள்ளகுளங்கள் |
|---|---|
| 1. அருவியாறு | A சேனநாயக்கநீர்த்தேக்கம் |
| 2. கலாஓயா | B நுவரவாவி |
| 3. மாதுறுஓயா | C இராஜாங்கனைக்குளம் |
| 4. கல் ஓயா | D மாதுறு ஓயா நீர்த்தேக்கம் |

(1) CBDA (2) ACDB (3) BCDA (4) CADB

17. இலங்கைக்குரிய பொதுவான வடிகாற்பாங்கு எது?

(1) மரநிகர் வடிகால் (2) கங்கண வடிகால் (3) ஆரை வடிகால் (4) அளியடைப்பு வடிகால்

18. மட்டக்களப்புப் பிரதேசத்தில்,தென்மேல் பருவக்காற்றிற்கு வழங்கப்படுகின்ற பெயர் என்ன?

(1) சோளகக்காற்று (2) கச்சான் காற்று (3) சூறைக்காற்று (4) மேலைக்காற்று

19. இலங்கையின் காலநிலை வலயங்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற காலநிலை மூலகங்கள் எவை?

(1) அமுக்கம்,காற்று (2) ஈரப்பதன்,அமுக்கம்

(3) காற்று,வெப்பநிலை (4) மழைவீழ்ச்சி,வெப்பநிலை

20. கலமெட்டியாவ, புந்தல,ஆனைவிழுந்தான் போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற இயற்கைத் தாவரங்கள் எவை?

(1) முட்புதர்கள் (2) பற்றைக்காடுகள் (3) கண்டல் தாவரங்கள் (4) ஈரவலயக் காடுகள்

(40 புள்ளிகள்)




kalvi.lk

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. கீழே தரப்பட்டுள்ள ஆசியப்புறவுருவப்படத்தில் 1 தொடக்கம் 12 வரை குறித்துக் காட்டப்பட்டுள்ள இலக்கங்களுக்குப் பொருத்தமான அம்சங்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து, தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

( இந்துசமுத்திரம்,தாய்வான்,செங்கடல்,யாவா, ரஷ்யா,டோக்கியோ,ஈரான் மேட்டுநிலம்,நேபாளம்,அல்ராய் மலைத்தொடர்,ஆப்கானிஸ்தான்,அரபிக்கடல்,அமூர் நதி )




| | |
|---|---|
| 1………………………………………… | 7 …………………………………….. |
| 2 ……..………………………………… | 8 …………………………………….. |
| 3 ……………………………………… | 9 …………………………………….. |
| 4 ………………………………………. | 10 ………………………………… |
| 5 ………………………………………. | 11.………………………………… |
| 6 ………………………………………. | 12 …………………………………. |

(12 புள்ளிகள்)

02. 1) a. உலகின் மிகப்பெரிய மலைத்தொடர் எது?

b. சர்டேரியா,அமுடேரியாநதிகள் சென்றடைகின்ற உள்நாட்டுக்கடல் எது?

c. உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரி எது? (03புள்ளிகள்)

2) ஆசியப்பிரதேசத்தின் சமனற்ற சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்துகின்ற பௌதிகக் காரணிகள் நான்கு குறிப்பிடுக? (04புள்ளிகள்)

3) ஆசியப்பிரதேசத்திற்குரித்தான பௌதிக,மானிட சிறப்பம்சங்கள் ஐந்து எழுதுக?

(05புள்ளிகள்)



kalvi.lk

03. 1) ஆசியாக் கண்டத்தில் தோற்றம் பெற்ற புராதன நதிக்கரை நாகரிகங்கள் மூன்று குறிப்பிடுக? (03புள்ளிகள்)

2) ஆசியாவின் பிரதான விவசாய நாடாக பாகிஸ்தான் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு எழுதுக? (04புள்ளிகள்)

3) a.உலகின் பாரிய மோட்டார் வாகன உற்பத்தி நாடுகளில் ஆறாவது இடத்தைப்பெற்றுள்ள ஆசிய நாடு எது? (01புள்ளி)

b. மேற்குறிப்பிட்ட நாடு உற்பத்தி செய்கின்ற மோட்டார் வாகனங்களில் காணப்படுகின்ற சிறப்புப் பண்புகள் நான்கு தருக? (04புள்ளிகள்)

04. 1) உயரத்தின் அடிப்படையில் இலங்கையின் தரைத்தோற்ற வலயங்களைப் பெயரிடுக? (03புள்ளிகள்)

2) கடல்மட்டத்திலிருந்து 30 மீற்றர் வரையிலான உயரத்தைக் கொண்ட தரைத்தோற்ற வலயத்தில் காணக் கூடிய பௌதிக அம்சங்கள் நான்கு குறிப்பிடுக?

(04புள்ளிகள்)

3) a. இலங்கையின் பிரதானநீர்வீழ்ச்சிகள் நான்கினைப் பெயரிடுக? (02புள்ளிகள்)

b. நீர்வீழ்ச்சிகள் உருவாகும் விதத்தைச் சுருக்கமாகஎழுதுக? (03புள்ளிகள்)

05. 1) இலங்கைமழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் மூன்றுமுறைகளையும் குறிப்பிடுக? (03புள்ளிகள்)

2) இலங்கையின் வெப்பநிலைப்பரம்பலில் செல்வாக்குச் செலுத்துகின்றகாரணிகள் நான்குதருக? (04புள்ளிகள்)

3) தாழ்நிலஈரவலயக் காலநிலைக்குரித்தானபண்புகள் ஐந்துஎழுதுக? (05புள்ளிகள்)

06. 1) இயற்கைத்தாவரங்களின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றகாரணிகள் மூன்றுஎழுதுக? (03புள்ளிகள்)

2) காடுகளிலிருந்துபெற்றுக் கொள்கின்றபயன்கள் நான்குகுறிப்பிடுக? (04புள்ளிகள்)

3) a. இலங்கையில் முட்புதர்களும்,பற்றைக்காடுகளும் பரந்துகாணப்படுகின்ற இரண்டு பிரதேசங்களைப் பெயரிடுக? (02புள்ளிகள்)

b. மேற்குறிப்பிட்டகாடுகளுக்குஉரித்தானதாவரங்களின் பண்புகள் மூன்று குறிப்பிடுக? (03புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page